# சித்தர்களின் கொள்கை

68

**ஆ.காயத்ரி & முனைவர் த.நாகம்மாள் (SS) [2]**

[1] முதுகலை இரண்டாமாண்டு தமிழ் , [2] உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் -043

19764naga@gmail.com

ஆய்வுச் சுருக்கம்:

தமிழ் இலக்கியங்களில் பல இலக்கிய வகைய உள்ளன. அவ்விலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இலக்கியமாக கருதப்படுவது சித்தர் இலக்கியம் ஆகும். சித்தர் இலக்கியத்தில் பல சித்தர்களின் வாழ்வியலும். தத்துவமும். அவர்களின் தனிச்சிறப்பும் சித்த நெறிமுறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சித்தர்களில் பதினெண் சித்தர்கள் மிகவும் முக்கியமானவர் காளாக கருதப்படுகின்றனர். சித்தர்கள் என்ற சொல் சித்தி பெற்றவர்கள் என்று அழைக்கப்படுகின்றன. வீட்டின்பம் அடைந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. சமண மதத்திலும் புத்த மதத்திலும் சித்தர்களை சாரணர் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவு வரை சித்தர்களின் வாழ்க்கை வாழ்க்கை நெறியானது பின்பற்றப்படுகிறது.

திறவுச் சொற்கள் : சமரச ஞானி , நரை திரை , மூப்பு , மெய்ப்புலன்

முன்னுரை :

சித்தர்கள் பொது வாழ்க்கை நெறிக்கு உடன் படாதவர்களாகத் தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழி முறைகளை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்த இயற்கையோடு இயற்கையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவார். "சித்தர்" என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். சித்-அறிவு, சித்தை உடையவர்கள் சித்தர்கள். நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர் என்றும் அறிஞர்கள் என்றும் பொருள்படுவதாக பழந்தமிழ் நூல்கள் என்றும் கூறுகின்றன. மருத்துவத்தோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியலையும் தந்தவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டனர். "மெய்ப்புலன் காண்பது அறிவு" என்பதிற்கிணங்க, உண்மை அல்லது மெய் நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள். சித்தர்களின் கொள்கைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சித்தர்களின் கொள்கை :**

பரமாத்மா எங்கும் தனியாக இல்லை. நமது உடம்பு தான் பரமாத்மாவின் இடம் ஆதலால் கடவுளைத்தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பைப் பேணுவதே கடவுட்பணி, உடம்பினுள்ளேயே பரமாத்மாவைக் கண்டு மகிழ்ந்திரு என்பது சித்தர் கொள்கை.

"உன்னுள்ளும் இருப்பான் என்னுள்ளும் இருப்பான்
உருவம் இல்லா உண்மை அவன்.
இதை உணர்ந்தார் இங்கே உலவுவதில்லை
தானும் அடைவார் அந்நிலை தன்னை "

( சித்தர் பாடல் )

என்னும் சித்தர்களின் கொள்கை படி மக்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர்.

உடம்பினைப் பெற்ற பயன் ஆவது எல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்

(ஔவை. ஞானக் குறள் – 274)

என்பது ஔவையின் ஞானக் குறள். இக்குறள், "உடம்பைப் பெற்ற பயன், உடம்பிலேயே உத்தமனை - பரமாத்மாவைக் காண்பதுதான்" என்று கூறிற்று. உடம்புதான் கடவுள் என்ற கருத்து இக்குறளில் அமைந்திருப்பதை அறியலாம். "இவ்வுலகிலே பிறந்த மக்கள், முன்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி இன்பத்தையோ, துன்பத்தையோ அனுபவிக்கின்றனர். அவர்கள் முன் செய்த பாவம் காரணமாகப் பல நோய்களையும் அடைகின்றனர். இத்தகைய நோய்களுக்குக் கர்ம வியாதிகள் என்று பெயர். கர்ம வியாதிகளைத், தீர்க்க முடியாது. அவற்றை அடைந்தோர் அவற்றின் கொடுமையை அனுபவித்துத்தான் கழிக்க வேண்டும்" என்பது வைதீகர்களின் கொள்கை. சித்தர்கள் இக்கொள்கையை நம்பவில்லை. மக்கள் இவ்வுலகில் யாதொரு துன்பமும் இல்லாமல் இன்பத்துடழ்ச்சியுடன் இருப்பதற்கும் இல்லாமல் உண்டு; கர்மவியாதிகள் என ஒன்றுமேயில்லை; தீர நோய்கள் என எதுவும் இல்லை; எல்லா நோய்களையும் தீர்த்துவிட முடியும்; என்றும் மாறாத இளமையுடன் வாழ முடியும்" என்று சித்தர்கள் நம்புகின்றனர். மக்கள் நோயின்றி நல்வாழ்வு வாழ்வதற்காகவே, கவலையின்றி ஆனந்தத்துடன் வாழ்வதற்காகவே - நரை திரை, மூப்பு, பிணியின்றி வாழ்வதற்காகவே - யோகப் பயிற்சியை வலியுறுத்தியிருக்கின்றனர். மூச்சை நமது விருப்பப்படி விடவும், இழுக்கவும், நிறுத்தவும் பழகுவதே யோகப் பயிற்சி. இப்பயிற்சிக்காகவே யோகாசனங்களைப்பற்றிக் கூறியிருக்கின்றனர். இதற்குமேலும் நோய் வந்தால் அதை விரட்டுவதற்கு மருந்துகள்

கண்டுபிடித்திருக்கின்றனர்; நீண்டநாள் வாழ்வுக்காகக் காயகல்பங்கள் என்னும் மருந்து வகைகள் கூறுகின்றனர். "யோகப் பயிற்சியாலும், மருந்துகள், கற்பங்களாலும் நீண்டநாள் வாழலாம்; மகிழ்ச்சியுடன் வாழலாம்; என்றும் இளமையுடன் வாழலாம்" என்னும் இக் கொள்கை வைதீக மதத்திற்கு மாறானது என்பதில் ஐயம் இல்லை.

சித்தர்கள் கொள்கைகளின் மூன்று பிரிவுகள் :

1. சித்தர்கள் - திருமூலர், போகர்.

2. ஞானச் சித்தர்கள் - பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகண்ணர், இடைக்காட்டுச் சித்தர்.

3. காயச் சித்தர்கள் - கோரக்கர், கருவூர்ச் சித்தர், மச்சமுனி, சட்டமுனி சுந்தரானந்தர், உரோமுனி.

**சித்தர்களின் ஞானம் :**

மதவாதிகள், ஆத்திகர்கள் உள்ளிட்டோர் "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற நம்பிக்கை உள்ளவர்கள். மக்கள் நூறாண்டுகள் தான் உயிர் வாழமுடியும் என்று நம்புகின்றனர். ஆனால் சித்தர்களின் நம்பிக்கை இதற்கு மாறானது. நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழமுடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கை கற்பக மூலிகைகளினை முறையாக உட்கொள்ளுபவர் நோயின்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழமுடியும் என்பது சித்தர்களின் நம்பிக்கை.

**வைதீக மதமும் சித்தர்களும் :**

உடம்பு வேறு; உயிர் வேறு; உடம்பு பெரியது; கண்ணால் காணக்கூடியது; அதாவது ஸ்தூலமாக இருப்பது. உயிர் நுண்ணியது; கண்ணால் காண முடியாதது; சூட்சுமமானது. உடம்பு நிலையற்றது; அழிந்துவிடும் இயல்புள்ளது. உயிர் நிலையுள்ளது என்றும் அழியாமல் இருப்பது; ஆதலால் உடம்பின் சுகம் கருதிப் பாடுபடுவது அறியாமை. உடம்பைப் பாதுகாப்பதற்காகக் காலங்கழிப்பவர்கள் உண்மை அறியாதவர்கள். இறந்தபின் உயிர் துன்புறாமல், இன்பம் அடைய நினைப்பவரே- இதன் பொருட்டு முயல்கின்றவரே அறிவுள்ளவர்கள்; “ஞானிகள்" என்பது மதவாதிகளின் கொள்கை. இக்கொள்கையைச் சித்தர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. "உயிரும் உடம்பும் ஒன்றே, உடம்பில்லாமல் உயிர் வாழ முடியாது. இரண்டும் தனித்தனியாக இயங்க முடியாது உடம்பிலே தோன்றி உடம்புடன் வாழ்வதே உயிராகும். உடம்பு அழிந்தால் உயிரும் அழிந்துபோகும். ஆதலால் உடம்பைப் பாதுகாப்பதே உயிரைப் பாதுகாப்பதாகும். உடம்பை அப்பழுக்கின்றி - மாசு மறுவின்றி வலுவுடையதாக வைத்துக் காப்பதே உயிரைக் காப்பதாகும்."

இதுவே சித்தர்களின் கொள்கை; நம்பிக்கை.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த் தேனே

( திருமந்திரம் – 724)

என்பது திருமூலர் திருமந்திரப் பாட்டு. "உடம்பு அழிந்தால் உயிரும் அழியும்; உடம்பை அழிய விடுகின்றவர் உறுதியான உண்மை அறிவைப் பெறமாட்டார். ஆதலால் உடம்பை வளர்க்கும் வழியை அறிந்தேன்; அழியாமல் உடம்பைப் பழுதுபடாமல் வளர்த்தேன்; அதனால் உடம்போடு கூடிய ஒன்று பட்ட உயிரையும் வளர்த்தேன்" என்பதே மேலே காட்டிய திருமந்திரத்தின் பொருளாகும்.

**சித்தர்கள் சமரச ஞானிகள் :**

வைதிக மதம் வருணாசிரம தர்மத்தை ஒப்புக்கொள்ளுகிறது. வருணாசிரம தர்மங் காரணமாக உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற கொள்கைகள் ஏற்பட்டன. பாரத நாட்டிலே சாதி வேற்றுமை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைத்து நிற்கின்றது. மனித சமுதாய ஒற்றுமையைச் சிதைக்கும் புல்லுருவி, சாதி வேற்றுமை, சாதி வேற்றுமையும், வருணாசிரம தர்மமும் சரிதான் என்று வாதிப்போர் இன்றும் உள்ளனர். சித்தர்கள் இக் கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. "மனித குலம் அனைத்தும் ஒரே இனம்; ஒரே சாதி" என்பதுதான் சித்தர்களின் கொள்கை. சித்தர்களின் பாடல்களிலே சாதி வேற்றுமையைப் பலவாகத் தாக்கிப் பாடியிருக்கின்றனர். சாதி வேற்றுமை பாராட்டுவோரை மூடர்கள் என்றும், கொடியவர்கள் என்றும் கடிந்து கூறியிருக்கின்றனர்.

சித்தர்களின் பாடல்களிலே மத வெறுப்பைக் காணமுடியாது. எந்த மதத்தையும் அவர்கள் நேரடியாகத் தாக்கிப் பாடவில்லை. மொழி வெறியோ இன வெறியோ அவர்களிடம் காணப்படவில்லை. சித்தர்களின் பாடல்களிலே வடசொற்கள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. சீனர்களும் சித்தர்களாகப் போற்றப் பட்டிருக்கின்றனர். போகர், புலிப்பாணி ஆகிய சித்தர்கள் சீனர்கள்; சீன தேசத்திலிருந்து வந்தவர்கள்; மொழியாலும் இனத்தாலும் வேறுபட்டவர்கள். ஆயினும் இவர்களும் தமிழ்நாட்டுச் சித்தர்களால் போற்றப்படுகின்றனர்.

சித்தர்களிடம் வடநாடு, தென்னாடு என்ற வேற்றுமையும் இல்லை. வான்மீகர், தன்வந்திரி, பதஞ்சலி, அகத்தியர், திருமூலர் முதலியவர்கள், கோரக்கர் போன்ற சித்தர்கள் வடநாட்டினராலும் போற்றப்படுகின்றனர்;தென்னாட்டாராலும் போற்றப்படுகின்றனர். இவர்கள் பாரத நாட்டுக்கே

பொதுவானவர்கள். இவர்கள் வடநாட்டினர் என்று கூறுவோர் உண்டு. எந்நாட்டினராயினும் சரி; தமிழ்நாட்டுச் சித்தர்கணத்துள் சிறந்து விளங்குகின்றனர்.

**சித்த வைத்தியம் :**

சித்தர்களின் வைத்திய முறைகள் காலம் குறிப்பிடப்பட முடியாத பழமையானதாக இருக்கிறது. பண்டைத்தமிழரின் அறிவியல்அறிவின் சிகரமே சித்த வைத்தியமாகும். மனித குலத்தைக் காக்கும் பொருட்டு, அன்றைய கலாச்சாரத்திற்கேற்பவும், மனித வாழ்க்கை முறைக்குத் தேவையான, அனைத்து ஆரோக்கிய முறைகளையும் மிக எளிய வைத்திய முறைகளை, அனைவரும் செய்துகொள்ளும் பொருட்டு தந்தனர். அவ்வைத்திய முறைகளை, அவர்களின் இருப்பிடத்திலே அருகில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு, மனித குலத்தைக் காத்து வந்தனர். சித்த வைத்தியர்கள் அல்லது சித்தர்கள், உடல்நலன் பாதிக்கப்பட்டு நோயுடன் வருபவர்களின் கையின் நாடித் துடிப்பின் தன்மைகளை அறிந்து கொண்டு, நோயினை நீக்குவர். மூலிகைச் செடிகளின் இலைகளைப் பொடியாக்கியும், தைலமாகவும் தருவர். இம்மருந்து உடலில் மெதுவாகக் கரைந்து, இரத்தத்துடன் கலந்தபின் நோய் முற்றிலும் குணமாகி விடும். இதனால் எந்த விதமான பின் விளைவும் இருக்காது. தீராத வியாதிகளையும், தீர்த்து வைத்திடும் வைத்தியம் சித்த வைத்தியம் ஆகும். மக்கள் அனைவரும், ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்றும், பொய், சூது, கொலை, குடி, விபச்சாரம், கூடா ஒழுக்கம் ஆகியவை உடல் நோயை உண்டாக்கும் என்றும் யோகப் பயிற்சியிலே வாழ்வில் வெற்றி பெறமுடியும் என்றும் உடல் வலிமையுடன் நீண்டநாள் வாழ முடியும் என்றும் சித்தர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். "உலகில் சாவாமைக்கு வழிகாண முடியும் என்ற உயரிய நோக்கம் கொண்ட மருத்துவ முறை சித்த மருத்துவமே".

**முடிவுரை:**

ஐம்புலன்களையும் அடக்கி ஆண்ட சித்தர்கள் தந்த கொடையாம் சித்தர் இலக்கியங்கள். இவ்விலக்கியத்தில் கண்டெடுக்கப்பட்ட பாடு பொருள்கள் ஏராளம். அவற்றுள் உடல் கூறுகள் மருத்துவச் செய்திகள் வானியல் கூறுகள் ஆகியவற்றையும் குறிக்கும் வகையில் சித்தர்களின் கொள்கைகள் அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்:**

சாமி.சிதம்பரனார் - சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம்
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600108 முதல்பதிப்பு- ஆகஸ்ட், 2001